# நீல நீந்தும் நண்டு
## சிற்றறிக்கை இல.5

நீல நீந்தும் நண்டு சிற்றறிக்கை ஐந்தாவது பதிப்புக்கு உங்களை வரவேற்கிறோம். கடந்த ஆறு மாதகாலங்களில் குஜீ (மீன்பிடி அபிவிருத்தி திட்டம்) ஆனது ஆசியாவின் முதலாவது சா்வதேச ரீதியாக பரிந்துரை செய்யப்பட்ட நீடித்து நிலைக்கக்கூடியதான முகாமை செய்யப்படும் BSC மீன்பிடித்துறையாக ஆகுவதை நோக்கி தொடா்ந்து முன்னேற்றம் பெற்று வருகிறது. இலக்கு வைக்கப்படாத உயிரினங்கள், கடல்சாா் வாழ்விடங்கள் மற்றும் கடல்சாா் வாழ்வுச் சூழல்களின் மீது மீன்பிடி ஏற்படுத்தும் தாக்கத்தை சீா்செய்யும் விதத்திலே பல உப – செயல் திட்டங்களை குஜீ ஆரம்பித்து வைத்திருக்கிறது. BSC மீன்பிடியாளா்கள் கட்டுப்படுத்தும் அதிகார பீடத்தினா் மற்றும் உற்பத்தியாளா்கள் மீன்பிடியை பொறுத்தவரை ஒரு அறுவடைக் கட்டுப்பாட்டு மூலோபாயத்தை நோக்கி நகா்வுகளை மேற்கொண்டிருக்கிறாா்கள். இந்த நடவடிக்கைகள் மற்றும் மேலதிக விடயங்களும் நீல நீந்தும் நண்டு சிற்றறிக்கை இலக்கம் 5 இல் முன்வைக்கப்படுகின்றன.

## கடல்வள இருப்பின் உயிரியல் ரீதியான தகுநிலையை மேம்படுத்தல்



தேசிய நீரியல் மூலவளங்கள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவரமைப்பின் (NARA) BSC இனுடைய குடித்தொகை உயிரியல் தொடா்பான அறிக்கையானது யூன் மாதத்தில் குஜீ இற்கு சமா்ப்பிக்கப் பட்டது. NARA இனுடைய ஆய்வு பெறுபேறுகள் - சிறிலங்காவில் முதன்முதல் மேற்கொள்ளப்பட்ட டீளுஊ தொடா்பான முதலாவது விஞ்ஞான பூா்வமான ஆய்வு இதுவாகும் -இனப்பெருக்கம் முதல் முதிா்ச்சியை அடையும் போதான அளவு, பால்நிலை வீதம், முட்டையிடும் பருவகாலம், மேலோட்டினுடைய அகலத்துக்கும் எடைக்கு மிடையேயான தொடா்பு, உணவு பெறும் வாழ்வுச் சூழலியல் மற்றும் வங்காள விரிகுடாவில் உள்ள டீளுஊ உயிரினத் தொகுதியின் முட்டையிடுவதற்கான உள்ளாா்ந்த திறன் பற்றிய மதிப்பீடுகள் முதலியவற்றை உள்ளடக்குகிறது. 120 மி.மீ(வயது 1 + ) க்கு மேற்பட்டவையான வேறுபடுத்திக் காணக்கூடிய இனக்குழுமங்கள் கிடைக்காத படியினால் வளா்ச்சி மற்றும் இறப்பு வீதம் தொடா்பான சாரா மாறிகளை மதிப்பீடு செய்வதற்கு NARA வினால் இயலாமல் போய்விட்டது. கலாநிதி சிசிர ஹப்புத்தந்திரியும் அவரது ஆய்வுக் குழுவினரும் மீன்பிடி மற்றும் நீரியல் சாா் ஆய்வு சங்கத்தினரின் (SLAFAR) 2016 ம் ஆண்டின் வருடாந்த அமா்வுகளின் போது மூன்று ஆய்வு அறிக்கைகளை சமா்ப்பித்திருக்கிறாா்கள். இந்த வருட பின்பகுதியில் இடம்பெறவிருக்கும் SLAFAR இன் அமா்வுகளின் செயற்பாடுகளின் போது நண்டின் வடிவம், இனப்பெருக்க உயிரியல் மற்றும் உணவு மற்றும் உணவு கொள்ளும் பழக்கங்கள் பற்றிய விஞ்ஞான ஆய்வறிக்கைகள் சமா்ப்பிக்கப்படும்.

ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் (UWU) இறுதியாண்டு மாணவியான அயந்தா அபேகுணவா்த்தன வங்காள விரிகடாவில் உள்ள BSC இன் இனப்பெருக்க உயிரியலின் அம்சங்கள் தொடா்பான ஆய்வு அறிக்கை ஒன்றை ஜனவரியில் இடம்பெற்ற UWU வின் 6வது ஆய்வுக் கருத்தரங்கில் சமா்ப்பித்தாா். அயந்தாவின் ஆய்வானது Sacculina sp. (ஸக்குலினா ஸ்பெ.) ஒட்டுச் சிப்பியால் BSC இல் ஏற்படுத்தப்படும் ஒட்டுண்ணி தொற்றையும் சிறி லங்காவில் முதல் தடவையாக, அடையாளம் கண்டிருக்கிறது. UWU இன் நீரியல் வளங்கள் மற்றும் ஏற்றுமதி பொருள் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதியான கலாநிதி ஸேபாலிக்கா ஜயமான்ன வினால் அயந்தா நெறிப்படுத்தப் பட்டாா்.

யூன் மாதத்திலே, மீன் மற்றும் மீன்பிடி ஆய்வுக்கான மேடொக் பல்கலைகழக மையத்தை சோ்ந்த கலாநிதி அட்றியன் ஹோடிக் (வலம்) barefootecologist என்ற இணையதளத்தை ஆரம்பித்து வைத்துள்ளாா். இந்த இணையத்தளமானது நீள அடிப்படையிலான முட்டையிடும் உள்ளாா்ந்ததிறன் தொடா்பான கலாநிதி ஜெறெமி பிறின்ஸின் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட புதிய பிரயோகம் (app) ஒன்றை உள்ளடக்கியிருக்கிறது. FIP ஆனது 2014/15 2015/16 களில் BSC பிடிப்பு பகுதிகளில் பெறப்பட்ட முதிா்ச்சியடையும் போதானா அளவு மற்றும் நீளத்தின் பொது முறை நிகழ்வு (Length Frequency) முதலிய தரவுகளுடன் இந்த புதிய யீஜப் பயன்படுத்தியது. M/k மற்றும; $L_{50}$ /$L_{inf}$ ஆகியவை கலாநிதி பிறின்ஸ் (வலம்) இனால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன. இதன் போது பெறப்பட்ட முட்டையிடும் உள்ளாா்ந்த திறன் (SP) பற்றிய மதிப்பீடுகள் மீன்பிடி பரப்புகளிலும் ஒட்டுமொத்த மீன்பிடி ஆகிய இரண்டிலும் அதிக பட்ச நீடித்து நிலைக்கக்கூடிய விளைவு வளம் தொடா்பான இலக்கு உசாத்துணை புள்ளியை விட அதிகமானவையாக இருந்தன. BSC உயிா்வள தகுநிலை மதிப்பீடுகளை மேம்படுத்துவதற்கென அடுத்த தவணையின் போது FIP ஆனது முதிா்ச்சியடையும் போதான அளவு தொடா்பான மேலதிக தரவுகளை தொடா்ந்தும் சேகரிக்கவிருக்கிறது.



| வருடம | சிறிலங்கா | மீன்பிடிப்பரப்புகள் வங்காள விரிகுடா | மீன்பிடிப்பரப்புகள் மன்னாா் குடா |
|---|---|---|---|
| உற்பத்தி | 100% | 80% | 20% |
| **2015/16** | **45.4%** | (44%) **45%** (46%) | (43%) **47%** (51%) |
| **2014/15** | **31.8%** | (31%) **32%** (33%) | (29%) **31%** (33%) |

# மீன்பிடியின் வாழ்வுச் சூழலியல் தகுநிலையை மேம்படுத்துதல்

கடந்த ஆறு மாதங்களாக குஜீயினுடைய கவனத்தை ஈர்த்திருந்த முக்கிய விடயமாக இலக்கு வைக்கப்படாத உயிரின வகைகள் (NTS), கடல்சார் வாழ்விடங்கள் மற்றும் பரவலான கடல்சார் வாழ்வுச் சூழலியல் அமைப்புகள் மீது மீன்பிடி ஏற்படுத்தும் வாழ்வுச் சூழலியல் ரீதியான தாக்கங்கள் தொடர்பான அறிவை விருத்தி செய்து கொள்ளுவது இருந்தது. வேளூ மீதான மீன்பிடியின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு குஜீஆனது கடல்சார் கண்காணிப்பாளர் பேரவையின் (MSC) மட்டுப்படுத்தபட்ட மீன்பிடிக்கான தரவுகளுக்குரிய இடர் வரவு அடிப்படையிலான என்புச்சட்ட (RBF) அமைப்பைக் கைக் கொண்டுள்ளது. நீல நீந்தும் நண்டு மீன் பிடி காரணமாக வாழ்வுச் சூழலியல் ரீதியான தாக்கத்துக்கு உட்படும் ஆபத்திலிருக்கும் NTS களை அடையாளம் காண்பதற்கென FIP ஆனது ஆளுஊஇன் RBF என்புச்சட்ட அமைப்பை கணிய ரீதியான கள ஆய்வுகளுடன் இணைந்து பயன்படுத்தி உள்ளது.

மன்னார் கரைக்கு அப்பால் (வங்காள விரிகுடாவில்) BSC மீன்பிடியானது NTS மீது ஏற்படுத்தும் தாக்கத்தை விவரிக்கும் இறுதிவருட ஆய்வுக் கட்டுரை ஒன்றை வத்சல டொலவத்த மார்ச் மாதத்தில் சமர்ப்பித்திருந்தார். வத்சலவையும் UWUவின; மிருக விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடத்தின் பீடாதிபதியான கலாநிதி சேபாலிக்கா ஜயமன்ன நெறிப்படுத்தியிருந்தார். சமுத்திர பல்கலைகழகத்தின் மீன்பிடி மற்றும் கடல்சார் விஞ்ஞான பீடத்தின் இறுதி ஆண்டு மாணவியான எறாங்கா குணசேகரா (இடம் பார்க்கவும்) இலக்கு வைக்கப்படாத உயிரினங்கள் மீது SL BSC மீன்பிடி ஏற்படுத்தும் வாழ்வுச் சூழலியல் ரீதியான தாக்கம் குறித்த 2வது விஞ்ஞான ரீதியான ஆய்வை பூரணப்படுத்தியுள்ளார். எறாங்கா தனது ஆய்வை அன்னவாசல, கல்பிட்டிய ஆகிய இடங்களிலுள்ள மீன்பிடி சமூகங்களின் ஆதரவுடன் மன்னார் குடா மீன்பிடி பகுதிகளில் நடத்தியிருந்தார். OU இன் மீன்பிடி மூலவளங்கள் பிரிவின் முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி எம். எம். பைரூஸ் எறாங்கவை நெறிப்படுத்தியிருந்தார். மே மாதத்தில் NARA வில் நடத்தப்பட்ட SLAFAR இன் 2016ம் ஆண்டுக்கான அமர்வுகளின் போது அவர் தனது கண்டு பிடிப்புகளை அவர் சமர்ப்பித்தார்.



யூலை மாதத்தில் FIP இன் முதலாவது ஆய்வு உதவியாளராக எறாங்கா ஆனார். அவர் வேளூ உயிரினங்கள் தொடர்பான தனது 2வது 3வது மதிப்பீடுகளை மன்னார் குடாவில் பூரணப்படுத்திய பின் வங்காள விரிகுடா மீன்பிடி பரப்பில் மீன்பிடியின் வாழ்வுச் சூழல் ரீதியான தாக்கங்கள் தொடர்பான மேலதிக ஆய்வை மேற்கொள்ள நகரவிருக்கிறார். இந்த வருடத்தின் இறுதியளவிலே FIP ஆனது ஆறு சூழலியல் ரீதியான தாக்கம் தொடர்பான ஆய்வுகளை நிறைவு செய்திருக்கும். ஒவ்வொரு மீன்பிடிப் பரப்பிலும் தலா மூன்று ஆய்வுகளை மேற்கொள்ளும். இது மீன்பிடியானது வேளூ மீது ஏற்படுத்தும் தாக்கங்களையும் மீன்பிடியின் தாக்கங்கள் நீடித்து நிலைக்கக் கூடியதாக முகாமை செய்யப்படும் மீன்பிடியுடன் முரண்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு அவசியமான வழிமுறை (அப்படி ஏதாவது இருந்தால்) களையும் பற்றிய முன்னைய விட சிறப்பான புரிந்து கொள்ளுதலைத் தரும். நான்கு மீன்பிடிப் பரப்புகளில் 46 நாட்களுக்கு அதிகமான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 475 பிடிப்புகளில் இருந்து பெறப்பட்டுக் கொண்டிருக்கும் களத் தரவுகளினுடைய முதல்நிலை பகுப்பாய்வுகள் மொத்தப் பிடிப்பில் (8.30தொன்கள்), டீளுஊகள் 51% மாக இருக்கின்றன. என்பதை சுட்டிக் காட்டியுள்ளன. மேலும் 39மூ மானவை BSC மீனவர்களால் வைத்துக் கொள்ளப்பட்டன. பிடிக்கப் பட்டவற்றில் வெறும் 10% மே வீசப்பட்டன. ETP உயிரினங்கள் எதுவும் BSC மீனவர்களின் பிடிப்பில் இது வரை அவதானிக்கப் படவில்லை. இதுவரையில் பதிவு செய்யப்பட்டவற்றில் எதிர்பார்க்கப்பட்ட வீச்சுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது, வளைந்த மூக்கு கடற்பாம்பு (Enhydrina schistosa) மட்டுமேயாகும். மொத்தமாக 84 NTS கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. இந்த உயிரின வகைகளிலே நான்கு வகையானவை பேணுகை அக்கறைகளுக்குரியவையாகும். திருகு சுருள் மெலோங்கா (Pugilina cochlidium @ 14.92%) வெளியேறிய விளிம்புள்ள ஸ்ரிங்கிறே (Dasyatis zugei @ 5.58%) நீல புள்ளியிட்ட ஸ்ரிங்கிறே (Neotrygon Kuhlii @ 4.82 %) மற்றும் கடல் பூனை மீன் (Arius @ 3.35 %) ஆகியவையே அந்த நான்கும் ஆகும்.



கடல்சார் வாழ்விடங்கள் மற்றும் முன்னையவிட பரவலான உயிர்வாழ்வு சூழல் அமைப்புகள் மீது மீன்பிடி ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பான ஆய்வுகளை 2016 ஏப்ரலில் குஜீ தொடங்கியது. கொழும்பு பல்கலைகழகத்தின் விலங்கியல் பிரிவினுடைய இறுதி வருட பட்டாதாரி மாணவரான ஜீவந்த பண்டார யாழ்ப்பாணத்தின் மேற்கு கரையோரத்துக்கு அருகேயுள்ள டீளுஊ பிடிக்கும் கிராமங்களின் அண்மித்து உள்ள கடல்சார் வாழ்விடங்களின் புஜளு வரைபடத்தை உருவாக்கி வருகிறார். அவர் இரண்டாம் நிலை தரவுகளையும் சமூக நேர்காணல்களையும் பயன்படுத்துகிறார். அடுத்த தவணையின் போது அவர் மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகளை கடல்சார் வாழ்விடங்கள் மீது மேல்பதிவு செய்யப் போகிறார் நேவ குனைெநச யீ வசதி கொண்ட கைத் தொலை பேசிகளால் உருவாக்கப்பட்ட புஜளு தரவுகளை இதற்குப் பயன்படுத்துவார். வங்காள விரிகுடா மீன்பிடிப் பரப்புகளில் உள்ள கடல்சார் வாழ்விடங்கள் மீது டீளுஊ பிடிப்பு ஏற்படும் தாக்கத்தை மதிப்பீடு செய்ய இதனை பயன்படுத்துவார். கொழும்பு பல்கலைகழகத்தின் கணினி பாடசாலையின் கலாநிதி சந்தருவன் மற்றும் அவரது அணியினரும; Net Finder app ஐ உருவாக்குவதை அண்மையில் பூரணப்படுத்தியிருக்கிறார்கள்.

# SLBSC மீன்பிடியின் முகாமைத்துவத்தை மேம்படுத்தல்

யூன் மாதத்தில் சிறிலங்காவின் டீளுஊ மீன்பிடிக்கான அறுவடையைக் கட்டுப்படுத்தும் மூலோபாயம் ஒன்றை வரைபு செய்ய FIP தொடங்கியது. நீடித்து நிலைக்கக் கூடிய மீன்பிடி புதிரில் இறுதியாக பொருத்தப்பட வேண்டிய துண்டமாக இது இருக்கிறது. சிறிலங்காவின் BSC மீன்பிடிக்கான அறுவடைக் கட்டுப்பாடு மூலோபாயமானது அளவை தெரிவு செய்வது ரீதியான மீன்பிடி முகாமைத்துவத்துடன் உடனிணைந்து உழைக்கும் ஒரு அணுகுமுறையில் தங்கியிருக்கும். அளவை தெரிவு செய்யும் அடிப்படையிலான முகாமைத்துவமானது மூலவளம் குறைந்த மற்றும் தரவு மட்டுப்படுத்தப்பட்ட மீன்பிடியைக் கொண்ட சிறிலங்காவிலுள்ளது போன்ற BSC மீன்பிடிக்கு பொருத்தமானதாகும்.

அளவை தெரிவு செய்வதன் அடிப்படையிலான மீன்பிடி முகாமைத்துவத்துடன் உடனுழைக்கும் அணுகுமுறையானது 4 முக்கிய ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்படும் (கீழே பார்க்கவும்). இந்த ஆவணங்கள் நான்கும் இணைந்து சிறிலங்காவிலான BSC மீன்பிடிக்கான அறுவடைக் கட்டுப்பாட்டு மூலோபாயத்தை உருவாக்கும். இந்த மூலோபாயமானது சிறிலங்காவிலான மீன்பிடி மற்றும் நீரியல் மூலவளங்களின் முகாமைத்துவத்துக்கானதும் தற்போது இருப்பில் இருப்பதுமான சட்ட ரீதியான என்புச் சட்ட அமைப்புக்கு அமைவானதாக இருக்கிறது. அது நடைமுறை சாத்தியமானதாக இருக்கும்படி வடிவமைக்கப் பட்டுள்ளது. உத்தேச அறுவடைக் கட்டுப்பாட்டு மூலோபாயமானது சிறிலங்காவினுடைய கட்டுப்படுத்தும் அதிகார பீடங்கள் BSC மீன்பிடி சமூகங்கள் மற்றும் BSC உற்பத்தியாளர்களின் இருப்பிலிருக்கும் அமைப்பு ரீதியான நிர்வாக ரீதியான மற்றும் முகாமைத்துவ இயலளவுகளைப் பயன்படுத்துகிறது. இந்த மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நிர்வாக பொறியமைப்பு, நிறுவகங்கள் மற்றும் தனிநபர்கள் ஏற்கனவே உரிய இடங்களில் இருக்கிறார்கள்.

| 1996ம் ஆண்டின் மீன்பிடி ரூ நீரியல் மூலவளங்கள் சட்டம் இல. 2. | BSC விதிகள் | அறுவடைக் கட்டுப்பாட்டு விதிகள் மற்றும் கருவிகள் | மீன்பிடி முகாமைத்துவ திட்டங்கள் |
| --- | --- | --- | --- |









அடுத்த 3 மாதங்களுக்கு அறுவடை கட்டுப்பாடு மூலோபாய வரைவின் ஒவ்வொரு மூலக்கூறுகள் பற்றியும் அறுவடை செய்யும் சமூகங்களுடன் கலந்துரையாடப்படும். இந்த மூலோபாயம் பற்றி மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களம் மற்றும் யேசுயு மற்றும் அது போலவே சிறிலங்காவிலுள்ள முக்கிய டீளுஊ உற்பத்தியாளருடனும் கலந்துரையாடப்படும். குஜீ ஆனது இந்த கலந்துரையாடல்களுக்கான ஏற்பாடுகளை செய்யம் என்பதோடு நீடித்து நிலைக்கக் கூடியதாக முகாமைத்துவம் செய்யப்படும் மீன்பிடியோடு முரண்படாத மட்டம் ஒன்றிலே மீன்பிடியின் உயிரியல் ரீதியானதும் வாழ்வுச் சூழலியல் ரீதியானதுமான தகுநிலையை டீளுஊ மீன் பிடி முகாமைத்துவம் பேணுவதை உறுதி செய்வதற்கு தேவையான முக்கிய நிபந்தனைகளை உரிய இடங்களில் இடம்பெறச் செய்வது தொடர்பான உடன்பாடுகளை எட்டுவதற்கும் FIP தனது உறுப்பினர்களை ஊக்கப்படுத்துவதும்.



BSC மீன்பிடி சமூகங்களும் உற்பத்தியாளர்களும் சிறிலங்காவிலே தமிழ்நாட்டு இழுவைப் படகுகள் மேற்கொள்ளும் சட்டவிரோதமான, கட்டுப்படுத்தப்படாத, அறிக்கையிடப்படாத (IUU) மீன்பிடியை முடிவுக்கு கொண்டு வரும் சிறிலங்காவின் முயற்சிகளுக்கு தொடர்ந்தும் உந்து சக்திகளாக திகழ்கிறார்கள். இந்த மீன்பிடியானது வடசிறிலங்காவிலான டீளுஊ மீன்பிடி உள்ளிட்ட, மீன்பிடிகளின் நீடித்து நிலைக்கக்கூடிய முகாமைத்துவத்துக்கான ஆகப்பெரிய அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. ஜனவரி மாதத்தில் சிறிலங்கா கடலுணவு உற்பத்தியாளர்களின் சங்கம் (SEASL) ,ங்குள்ள வெளிநாட்டு தூதரகங்களின் தலைமை அதிகாரிகளுடனான ஒரு கலந்துரையாடலை நடத்தியது. சிறிலங்கா கடற்பரப்புகளிலே தமிழ்நாட்டு இழுவைப் படகுகளால் மேற்கொள்ளப்படும் IUU மீன்பிடியை தடுத்து நிறுத்துவதன் அவசியம் பற்றியதாக இந்த கலந்துரையாடல் அமைந்தது. மீன் மோசடி பற்றி தொழிற்துறையினர் கொண்டிருக்கும் அக்கறை பற்றியும் ளுநுயுளுடு எடுத்துக் கூறியது. பெப்ரவரி மாதத்திலே சிறில்ஙகா கடற்பரப்புகளிலே இந்திய மீனவர்கள் மேற்கொள்ளும் IUU மீன்பிடிக்கு எதிர்ப்பு தெரிவித்து 200க்கு மேற்பட்ட மீனவர்கள் மற்றும் குடிசார் சமூக அமைப்புகள் வீதி ஆர்பாட்டத்தை கொழும்பில் மேற்கொண்டிருந்தனர். அன்று மாலையிலேயே நடத்தப்பட்ட பகிரங்க கருத்தரங்கு ஒன்றிலே பாரளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கல்விமான்கள் கலந்து கொண்டதோடு வடக்கிலிருந்து வந்த மீனவர்களின் தலைவர்கள் அங்கு வந்திருந்தவர்களுக்கு உரையாற்றினார்கள்.

## தற்போதைய சமூக பொருளாதார பங்கு

பொருண்மிய மற்றும் சமூக நடுநிலை FIP இற்கும் நீடித்திருக்கும் விதத்தில் வழங்கல் மூலத்தை கொண்ட கடலுணவுகளுக்குமான சர்வதேச மரபொழுங்குகள் நீடித்து நிலைக்கக்கூடிய விதமாக முகாமைத்துவம் செய்யப்படும் மீன்பிடிகளில் இருக்கும் பொருண்மிய அல்லது சமூகநடு நிலைகள் தொடர்பாக எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. மீன்பிடியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் காரணமாக எழும் பயன்கள் மீன்பிடி சமூகங்கள், உற்பத்தியாளர்கள் (அவர்களது பணியாளர்கள்) மற்றும் சிறிலங்கா அரசு ஆகியோருக்கிடையில் நடுநிலையாக பகிரப்படுவதை உறுதி செய்வதில் FI P இன் உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறார்கள்.




இந்த வருடத்தின் முன் அரைவாசியிலே, BSC மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ இயலுமைகளை கட்டியெழுப்புவதில் குஜீ தொடர்ந்து ஈடுபட்டிருந்தது. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 11கூட்டுறவுச் சங்ககங்கள் ஏற்கனவே உதவிகளை பெற்றுக் கெதாண்டிருக்கின்றன. இந்த உப – செயல் திட்டமூடாக யாழ்ப்பாணத்திலுள்ள ஏழு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒரு சமாசத்திற்கும் புத்தளத்திலுள்ள 9 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இந்த உதவிகள் விஸ்தரிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ தேவைகளை மதிப்பீடு செய்வதற்கு கள மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டன. சங்க உத்தியோகத்தர்கள் மற்றும் எழுது வினைஞர்களுக்கு, பூநகரி மீன்னவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் 1நாள் கண்டறியும் பயணம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்ததோடு அவர்கள் கிராமமட்டத்தில் வெற்றிகரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் கூட்டுறவுச் சங்கத்தினரையும் சந்தித்தார்கள. இதைத் தொடர்ந்து எழுதுனர்களுக்கான ஆறு மாதகால பயிற்சி வழங்கப்பட்டதோடு அக்காலப் பகுதிக்கு சம்பளமும் வழங்கப்பட்டது. இந்த உதவியானது ஆறு மாதங்களுக்குள்ளாக நிர்வாகத்திலும் முகாமைத்துவத்திலும் குறிப்பிட்ட ஒரு மட்டத்தை எட்டுவதற்கு சங்கங்களுக்கு உதவியது.

## SLBSC மீன்பிடி / FIP தகுநிலை அறிக்கை

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மரபொழுங்குகளின் அடிப்படையில் மீன்பிடியை மதிப்பீடு செய்வதை மீளாய்வு செய்யும் FIP இன் இரண்டாவது உள்ளக மற்றும் உத்தியோகபூர்மற்ற செயற்பாடானது 2016 யூன் 30ம் திகதி பூரணப்படுத்தப்பட்டது. அதனுடைய பெறுபேறுகள் பின்வருவனவற்றை குறிப்பாக தெரிவித்திருக்கின்றன.

FIP ஆனது இப்பொழுது 3 வது கட்டத்தில் இருக்கிறது. மேம்படுத்தல்களை நடைமுறைப் படுத்தல் - உற்சாகப்படுத்தல்

MSC இன் மீன்பிடி மதிப்பீட்டு முறையியலை பயன்படுத்தினர் (v 2.0) மீன்பிடியானது 0.44 புள்ளிகளைப் பெறும் நீடித்து நிலைக்ககூடிய மீன்பிடிக்கான MSC இன் நியமங்களின் படி மீன்பிடி நிகழ்காலத்தில்

சித்தியடையாது பிடிக்கப்படும் மீன்களுக்கான கடல் உணவுக் கண்காணிப்பு செய்வழியை (v 2.0) பயன்படுத்தினால் மீன்பிடியானது 2.11 புள்ளிகளைப் பெறும். நிகழ்காலத்திலே கடலுணவு கண்காணிப்பு நியமங்களின்படி சிவப்பு / தவிர்க்கவும் ஆக வகைப்படுத்தப்படும்.

தப்ரபேன் சீ பூட்(பிறைவேட்) லிமிட்டட் ஆனது ஏப்ரல் மாதத்திலே FIP இன் உறுப்பினராகிய முதல் சிறிலங்கா BSC உற்பத்தியாளராக ஆகியது. FIP இற்கு ஆதரவான நிதி சேகரிப்பில் தொடர்ந்தும் புதிய மட்டங்களை அது எட்டியிருப்பதோடு 2013 இல் இருந்து இதுவரையான ஒட்டுமொத்த நிதி சேகரிப்பில் 43% அது சேகரித்து கொடுத்திருக்கிறது. யூன் மாதத்தில் பிறெஸ் கச் (பிறைவேற்) லிமிட்டட் ஆனது SEASL உடன் FIP இன் உறுப்பினராக ஆகிய இரண்டாவது BSC உற்பத்தியாளராக ஆகியிருகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட சிறிலங்கா BSC மீன்பிடியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள், தேசிய மீன்பிடி நிறுவகத்தின் நண்டு பேரவை, சர்வ தேச தொழில் நிறுவனத்தின் பொருண்மிய அபிவிருத்தி செயல் திட்டத்தினூடாக மேற்கொண்ட உள்;ர் வலுவூட்டல், ஏசியா பவுண்டேசன், ஸான்ரா மொனிக்கா ஸீபூட்ஸ், ஸீ புறோஸிண் பூட்சின் பிஸ்வைஸ் அன்ட் சிக்கிண் ஆகிய நிறுவகங்களின் பெருந்மன்மையான நிதி ஆதரவு இல்லாமல் சாத்தியமாகவே ஆகியிருக்காது. மேற்குறித்த அமைப்புகள் மற்றும் அவற்றினுடைய ஆளணியிருக்கும் அவர்களுடைய தொடர்ச்சியான ஆதரவு, புரிந்து கொள்கை, சிறிலங்காவிலான BSC மீன்பிடியை மேம்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் குறித்து பொறுமையோடு இருப்பதற்காகவும் FIP இன் உறுப்பினர்கள் நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள்.

ஆங்கில சிங்கள தமிழ் மொழிகளில் நீல நீந்தும் நண்டு சிற்றறிக்கையின் மென்பிரதிகளை SEASL இன் இணையத்தளத்திலிருந்து (www.seasl.lk) தரவிறக்கம் செய்யலாம். FIP தொடர்பான மேலதிக விவரங்களுக்கு தயவு செய்து steve@pelagios.lk இற்க ந – தபால் அனுப்புங்கள்